# ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள் !.....

## ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!-2014

ஆண்டொன்று பிறக்குதென்றால்;
ஆயிரம் கனவுக் கோலம்,
மூண்டநல் அறிவின் கீர்த்தி;
முகிழ்ந்தெழும் நாளைத் தேடும்!
ஆண்டவர் கொடுத்த ஆண்டே,
ஆகிய வழக்காய் நிற்க;
நீண்டநல் உறவினாலே
நெடிதுநாள் பழகிவிட்டோம்!

ஆன்றநம் முன்னோர் வழக்கின்
ஆண்டுகள் பல ஆயினும்;
ஈன்றநம் குடியரசு தானும்
ஏற்றதோர் ஆண்டு வழக்கம்;
ஆங்கதும் கொண்டோம் அல்லோம்;
அவரவர் வழக்கில் நின்றோம்!
ஓங்குமோர் முறையும் மறந்தோம்;
எண்ணுவீர் மனத்தி லேனும்;

- வேறு -

கனவிலும் நினைவிலும் கழித்திடும் நாளிலும்;
கணக்கிலும் வழக்கிலும் கண்டிடும் அனைத்திலும்;
இணக்கமாய் நம்முடன் இணைந்து விட்டதால்,
வணக்கமாய் அனைவர்க்கும் வழங்கினேன்
வாழ்த்து! **கவிஞர் கவிவளவன் 31.12.2013 - 23.59**

## புத்தாண்டு வாழ்த்துக்கள்! - 2016

பொன்னெனப் பூத்ததோ! புதுமைகள் நிறைந்ததோ!!
மன்னிய நிகழ்வுகளின் மாறிடும் வடிவங்கள்!
பின்னிய வழிமுறை பேசுமோர் ஆண்டின் சுழற்சி!
நன்னிய நலங்களை நாமெலாம் தேடுவோம்!

அன்னியன் ஆண்டோ ஆண்டவர் ஆண்டோ!
திண்ணமாய் விளைந்தத் திங்களின் தொடக்கம்!
மண்பதை போற்ற மானுடம் தழைக்க;
எண்ணமாய் கொண்டு எழுவோம் நாமெலாம்!

புண்ணிய நதிகளின் புதுப் புனல் போலே,
வண்ணமாய் நிறைந்து வளங்கள் பெருகவே!
**கவிஞர் கவிவளவன் (31-12-2015)**

## ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்! - 2017

மண்ணோடும் மனஞ்சூழும் மகிழ்வோடும்,
விண்ணேகும் மகிழ்வெய்தி நிறைததும்பும்,
பண்நிகர்த்த உள்ளொலியாய் நலஞ்சூழும்,
கண்ணொளியாய் இறையமுதாய் வாழ்ந்திடுக!
பணியாலும் நெறியாலும்,
பழகிவிட்ட வழியாலும்,
படர்புகழ் புத்தாண்டில்,
பகருவேன் நல் வாழ்த்து! **(01-01-2017)**

## ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்! -2018

புதியதோ! இனியதோ!
புதுமைகள் நிறைந்ததோ!
புத்தாண்டாய்ப் பிறந்ததே!
ஆண்டதும் ஆள்வதும்
ஆகிய நிலைபாடு!
சென்றதும் வந்ததுமாய்;
சிந்திய கனவுகள்!

வென்றதோ வியந்ததோ;
வாழ்க்கையின் நினைவுகள்!
மன்றிலில் ஆடும்,
மாயனின் கூத்தில்;
உள்ளம் நிறைந்த

மாந்தருக்கெல்லாம்,
ஒவ்வொரு நாளும்
புத்தாண்டே யன்றோ!

அனைவருக்கும் இனிய
ஆங்கிலப் புத்தாண்டு **நல் வாழ்த்துக்கள்!**
**(01-01-2018)**

## புத்தாண்டு 2019

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்;
நமது முகவரி மாற்றிய,
புத்தாண்டு பிறந்தது!

சொல்லும், செயலும்,
வாழ்வும் வனப்பும்,
எழுவதும் நிறைவதும்;
இயந்திர மாகிய,
வாழ்க்கைத் தொடரில்,
அத்துனை குறிப்புக்கும்,
ஆங்கிலத் தேதியே!

இணைந்து கொண்டதால்,
இயைந்து விட்டோம்!
கணினி இயலோடு,
யாவற்றுக்கும் அதுவே,
கணக்குப் பெட்டகம்!

இயலாகவும், இயல்பாகவும்,
நிறைவு கொண்ட,
ஆங்கிலப் புத்தாண்டில்;
அனைவருக்கும் வாழ்த்து!
**- கவிவளவன்**

## புத்தாண்டு வாழ்த்துக்கள் 2020

# விதியோ! இல்லை;
அவர் செய்த, சதியோ!!

முன்னூறு ஆண்டுகள்;
நம் முகவரி எழுதி,
விழுமிய அறிவும்,
வியத்தகு பெருமையும்,
அழிந்திடச் செய்து,

அவனியில் நம்மைப்,
புதியராய், ஆக்கியக்
கோலத்தின்;
முகவரி எழுதும்,
ஆண்டின் பிறப்பு!

# அன்பைச் சொன்ன
அருந்தவக் கேள்வன்,
ஏசு மகான் இம்
மண்ணில் பிறந்த
நாளெனத் தொடரும் ஆண்டு!
**அனைவருக்கும் இனிய,**
**ஆங்கிலப் புத்தாண்டு**
**வாழ்த்துக்கள்!**
- **கவிஞர் கவிவளவன்** (31-12-2019)

## புத்தாண்டு வாழ்த்து 2021

சென்றதாம் ஆண்டதனை நம்
சிந்தையில் மறப்போமோ!
கன்றெனவாய்க் கதறிநின்றோம்;
கருணையிலா வாழ்வு என்றே!
நின்றானே அந்த இறையவன்தான்
நேரியதோர் சாட்சியாக!
மன்றிலில் ஆடுமோர் காலம்,
மறுபடியும் வரவேண்டாம்!

நன்றிந்த ஆண்டிதுவே இன்று
நலமுடனே பிறக்குதென்போம்!
கொன்றொழித்த நுண்ணுயிரும்,
குவலயத்தின் இனி வேண்டாம்!
நன்றாமினிவரும் காலமென்று,
நலமுடனே மகிழ்ந்திருப்போம்!
அன்புடனே யாவருக்கும் அளிக்குமோர்
**ஆங்கிலப் புத்தாண்டு** வாழ்த்துதானே!
அன்புடன்,
**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
**01-01-2021**

## புத்தாண்டு! - 2024

புத்தாண்டு புதுமைகளோடு புதிதாய்ப் பிறப்பதோ!
எத்திக்கும் கொண்டாட்டம் இயன்நிலை கடந்தே!
சொத்தாய் மொழிகள் யாவிலும் புத்தாண்டுண்டே!
மத்தளம் முழங்க நள்ளிரவில் விழிக்கும் கோயில்!

முத்தாய் நமது முகவரியூடே முகிழ்வது இதுவே!
கொத்தாய் கணினியில் இணைந்து ஆளும் நாளுமே!
சித்திரை என்று தமிழில் சொல்ல சூரியன் வழியாம்!
முத்தாய் உலகோர் பலரும் கொள்வது சந்திரன் இயலே!

மண்ணில் இறையாய் மக்கள்சிலர் போற்றும் அண்ணல்,
மகான் ஏசுவின் பிறப்பை கொண்டு விளங்குவதன்றோ!
மறுவிலா இன்பம்சூடி மகிழ்வுடன் என்றும் வாழ்வோம்!
மகிழ்வுடன் **அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து!**
அன்புடன்,

- **கவிவளவன்.** 31-12-2023

# 2025 - புத்தாண்டு வாழ்த்து!

புதியதாய்ப் பிறக்கும் ஆண்டு பலப் புதுமைகள் செய்திடல் வேண்டும்!
நதியதனின் தனிப் பயணம் பல நன்மையுடன் தொடர்தலைப் போல்,
மதிகொண்டு போராடி மானுடத்தின் பெரும்பயனை நாமடைவோம்!
விதியென்னும் தடைகளைந்து யாவரும் வீறிட்டு எழுந்திடுவோம்!

மதிசூடி வெல்வார் தமக்கு வாழ்வில் மரணம் வரை பயமில்லை!
கதியென்று கதையுரைத்து, காலத்தை அழித்தல் இனி வேண்டாம்!
சதிராடும் மனம் தன்னில் போராட்டம் நிலைகொள்ளச் செய்திடுவோம்!
விதியென்று சொல்வதெல்லாம் வீணர்களின் சூழ்ச்சி வலையே!

வலுவாக மனத்தை வகைப்படுத்தி வைப்பார் தமக்குத் துன்பமில்லையே!
பொலிவில்லாச் சிந்தனையது நாளும் புலம்பிடவே தான் செய்யும்!
அலைமோதும் கடற்கரையின் அழகை நாளும் நாம் இரசிக்கின்றோம்!
வலைவீசி மீன்பிடிப்பார் வாழ்க்கையதும் அதில் தொடர்ந்திருக்கும்!

வணிகத்தின் பலநிலைகள் வளர்ந்திடவே கடல்நமக்கு துணையாகும்!
பிணிகொண்டு அவ்வபோது, புயலாகி வந்தாலும் தொடர்கின்றோம்!
அணியாக இயற்கை நமக்கு அடுத்து அடுத்து நன்மை செய்ய அதனை
மணியாக நெஞ்சில் கோத்து வாழ்வியலைச் முன்னெடுப்போம் மகிழ்ந்து!

-வேறு-

இனிதான சிந்தனைச் செயல்நிலையைக் கொண்டாட வேண்டும் மனமே!
நனியாக நற்பயனை நாமடைந்து மகிழ்வோம் இனிதாக எப்போதுமே!
பனிகொட்டும் மார்கழியும் வெயிலாளும் சித்திரையும் ஒன்றாகித்தான் நிறையும்!
கனிவாகப் புத்தாண்டில் கனவின்றி சூளுரைப்போம் இனிதாக வாழ்வதற்கே!

- **கவிஞர் கவிவளவன்** 31-12-2024 (இரவு 11.00)

## புத்தாண்டு 2022

ஆன்ற கணக்கில் ஆண்டுகள் பலவாம்!
தோன்றிய கணக்குகள் நிலையைச் சொல்லும்!
தோன்றத் துலங்கும் வழிமுறைக் கணக்கு!
ஆண்டுகள் சந்திரனை அளவாய் கொண்டு,

நீண்டதாம் கணக்குகள் நிறையவே யுண்டு!
கொண்டதாய் சூழல் கொள்கையாய் நிலைக்க,
ஆண்டின் கணக்குகள் அங்கங்கே மாறும்!
மாண்ட பெருமைதான் தமிழர்க்கு உண்டே!

ஆண்டின் கணக்கைச் சூரியனோடு செய்து,
நீண்டதாம் கணக்கில், தொய்வுகள் இல்லை!
மூண்ட அறிவில் முதன்மை கொண்டோர்!
கண்டநல் சீர்மை நெஞ்சில் கொள்வோம்!

கோள்களும் கூட சூடியப் பெயர்கள்,
கொண்டதாம் அறிவை உரக்கச் சொல்லும்!
ஆன்றசீர் மரபின் அலப்பறைகள் எதற்கு?
ஆனாலும் அறிவை அறிந்து கொள்வோமே!

அருளாளன் ஏசுவின் அவதாரம் தோன்றி,
மருவிலா நிலையில் மதமும் தழைக்க,
தருவாய் வணிகம் களம் பல கண்டிட,
உருவாய்ப் பிறந்த கிறிஸ்துவ ஆண்டு,

உலகம் முழுதும் ஆட்சியில் நிலைத்திட,
அளவாய்ச் சிலரும் ஏற்கா விடினும்,
தளமாய்ப் பலருக்கும் ஆண்டாய் ஆக,
களத்தில் பறிமாறும் குறிப்பில் நிலைத்தது!

போக்கு வரத்தும், புகலும் கணக்கும்,
தாக்கம் இன்றிச் சீராய் என்றும்
ஆக்கும் நிலையை ஆண்டிது செய்யும்!
போக்கிடும் பொழுதின் கணக்கைச் செய்து,

புலரும் பொழுதின் கணக்கிலும் ஆகி,
வளரும் நாளின் வரைமுறை யாவிலும்,
புலனாய் நின்று, ஊதியம் முதலாய்,
பலவும் செய்து, வாழ்வினை நகர்த்த,

செயலின் வடிவாய், சீரிய நிலையாய்,
நிலைத்த ஆண்டின் தொடக்கம் இன்று!

பொலிந்து மகிழ்ந்து யாவர்க்கும் சொல்வோம்,
நலிவின்றி நாள்கள் பிறக்கும் என்றே!

மதம்வழி சிலரும் மருவின்றிப் பலரும்,
மனமதில் மகிழ்ந்து ஆடிப் பாடிட,
இனமின்றிப் பிறக்கும் புத்தாண்டு இதுவே!
இனியாதாய் யாவருக்கும் **புத்தாண்டு வாழ்த்து!**

- அன்புடன்,

**கவிவளவன்** ஆகிய **கு அசோகன்.ப.**,
2022-01-01/2021-12-31

## புத்தாண்டு 2023

பிறந்தது புத்தாண்டென்று பெருமை கொள்வோம்!
உறவிலும் நிலையிலும் ஒவ்வொரு நிகழ்விலும்,
திறமாய் நின்று திகழும் ஆண்டின் கணக்கு!
பிறந்தநாள் முதலாய் யாவிலும் காலக்கணக்கு!

பள்ளியின் தொடங்கி பணியின் நிலைவரை,
துள்ளியோடும் ஒவ்வொரு நிலையிலும் நின்று;
உள்ளம் கொள்ளும் அனைத்திலும் ஆளும்!
நள்ளிரவே நாளின் தொடக்க என்பதால்,

புத்தாண்டு தன்னில் கோயில் நடையும்,
சத்தமின்றி திறந்து, சாற்றுமுறையும் அபிஷேகமும்,
மொத்தமாய்க் கூடி அனைவரும் செய்து மகிழ்வர்!
காலை எழுந்திடும் கதிரை கொண்டே,

நாளைச் சொன்னவன் நற்றமிழ் அறிஞன்!
நாளும் தொடர்ந்து மாதங்களாகிடச் சூரியன்
ஆளும் சுழற்சியின் நிலையே கணக்காம்!
மூளும் அறிவின் முகவரி சொல்லும் கணினி

காட்டும் கணக்கும் கிறிஸ்தவ ஆண்டே!
பாட்டாய் மனமாய், பாரினில் நிலையாய்,
கூட்டும் வாழ்வின் தொடர்ந்திடும் கணக்காய்,
சூட்டும் ஆண்டின் தொடக்க நாள் இன்று!

மாற்றமில் கணக்காய் மண்ணை ஆள்வதால்,
சாற்றும் அன்பில் சற்றும் பிறழாமல்,
போற்றும் யாவருக்கும் பொலிக புத்தாண்டு!
ஆற்றல் பெருகிவாழ அனைவருக்கும் வாழ்த்து!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
29-12-2022 (2.55 PM)